செ.வெ.எண்.953/2019 நாள்: 12.11.2019

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள், மேல்புறம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் முதல்முறையாக உள்ளாட்சி தேர்தலில் ஈடுபடுத்தப்படவுள்ள மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள, இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்ற, மாதிரி வாக்குப் பதிவினை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள், மேல்புறம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் முதல்முறையாக உள்ளாட்சி தேர்தலில் ஈடுபடுத்தப்படவுள்ள மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள, இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்ற, மாதிரி வாக்குப் பதிவினை இன்று (12.11.2019) பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

நமது மாவட்டத்தில் நடைபெறவுள்ள, உள்ளாட்சி தேர்தலில், முதல் முறையாக ஊராட்சி பகுதியில், மின்னணு வாக்கு பதிவு இயந்திரம் மேல்புறம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் பயன்படுத்தப்பட உள்ளது. இதற்கான மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் பழவிளையில் உள்ள இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. மின்னணு வாக்குபதிவு இயந்திரம் மூலம் நடைபெறவுள்ள மாதிரி வாக்கு பதிவு பழவிளை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதில் 742 மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் மற்றும் 177 வாக்குபதிவு கட்டுப்பாட்டு கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் மூலம் நடைபெற்ற, மாதிரி வாக்குப் பதிவு இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. அதனை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(தேர்தல்) திரு.யூ.நாகராஜன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. சையத் சுலைமான், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திரு.வே.பிச்சை, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எஸ்.ஆர்.கே.குமார், உள்ளிட்ட அலுவலர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் அ.இ.அ.தி.மு.க-வை சார்ந்த திரு.செ.வீராசாமி, திரு.வி.சுதர்சன், திரு.பு.வி.வர்க்கீஸ் (தி.மு.க) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.